நாள் 19.09.2023.

அசல் வழக்கு எண் 20/2021

பி சா 1 ராஜேஷ்குமார் , த/பெ முத்துகிருஷ்ணன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் ராஜேஷ் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் ராஜேஷ் என்று போட்டிருந்ததால் அவ்வாறு போட்டேன். வாதி பிராதில் சொல்லியுள்ள ராஜேஸ்ம் நானும் ஒரே நபர்தான் என்று சொன்னால் சரிதான். மேற்கு தொடர்ச்சி மலை சரியாக எங்கள் ஊரில் இருந்து 12 கி.மீ. மேற்கே அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்துதான் கிழக்கு நோக்கி நம்பியாறு உற்பத்தியாகி ஓடுகிறது என்று சொன்னால் சரிதான். அதேபோல் அதே மேற்கு தொடாச்சி மலையில் இருந்துதான் கொடுமுடியாறும் கிழக்கு நோக்கி ஓடுகிறது என்று சொன்னால் சரிதான். கொடுமுடியாற்றின் குறுக்கேதான் கொடுமுடியாறு அணை இருக்கிறது என்று சொன்னால் சரிதான். கொடுமுடியாறு அணையில் இருந்து வள்ளியூர் பெரியகுளத்திற்கு தண்ணீர் வருவதற்கு வள்ளியூரான் கால்வாய் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். 3ம் தபசிலுக்கு வள்ளியூர் பெயரிகுளத்தில் இருந்து தண்ணீர் வருவதற்கு கால்வாய் அமைந்துள்ளது என்றால் அவ்வாறு இல்லை. கொடுமுடியாறு அணையில் இருந்து நல்லபெத்தான்குளத்திற்கு தண்ணீர் வர கால்வாய் உள்ளதா என்றால், கால்வாய் இல்லை. அரசு அவ்வாறு கால்வாய் உள்ளதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தால் அது தவறா என்றால், தவறுதான்., கொடுமுடியாறு அணையில் இருந்து நல்லபெத்தான்குளத்திற்கு

தண்ணீர்வடவில்லையா என்றால், தண்ணீர் வருகிறது. ஆனால் தனியாக கால் கிடையாது. கொடுமுடியாற்றில் இருந்து வடமலையான் காலுக்கு தண்ணீர் வந்தால் எங்கள் குளத்திற்கு தண்ணீர் வரும். கொடுமுடியாற்றில் இருந்து வடமலையான்காலுக்கு தண்ணீர் வர எந்த வசதியும் கிடையாது என்று சொன்னால் அது தவறு வசதி இருக்கிறது. நம்பயிாற்றில் இருந்துதான் வரும். கொடுமுடியாற்றில் இருந்து வடமலையான்காலுக்கு தண்ணீர் வர எந்த திட்டமும் கிடையாது என்று சொன்னால், அது தவறு ஒரு ஷட்டர் ஒதுக்கி கொடுத்திருக்கிறார்கள். அந்த ஷட்டர் எந்த இடத்தில் இருக்கிறது என்றால், கொடுமுடியாறு அணையில் இருக்கிறது. அந்த கொடுமுடியாறு அணையில் நான் சொல்லுவதை போன்று ஒரு ஷட்டர் வள்ளியூரான் கால்வாய்க்கும் ஒரு ஷட்டர் நம்பியாற்றிற்கும் செல்லுகிறதா என்றால், ஆமாம். நம்பியாற்றிற்கும் அதன் கீழ் உள்ள குளங்களுக்கும் செல்கிறது. கொடுமுடியாறு அனை கட்டப்பட்ட பகுதி நம்பியாற்றி படுகைக்கு உட்பட்ட இடம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அது நம்பியாற்றின் ஒரு பகுதிதான். கொடுமுடியாற்றின் குறுக்கே கொடுமுடியாற்று அணை உள்ளது என்றும் நம்பியாற்றின் குறுக்கே நம்பியாற்றின் அனை உள்ளது என்று சொன்னாலும் அது தவறு. கொடுமுடியாற்றின் குறுக்கே உள்ள வள்ளியூரான் கால்வாய் வழியாக பெரியகுளத்திற்கு தண்ணீர் வந்து அது நிரம்பிய உடன்தான் ஒவ்வொரு குளமும் நிரம்பி 3ம் தபசில் குளத்திற்கு தண்ணீர் வரும் என்று சொன்னால், அது தவறு ஆவணத்தில் காஞ்சிபுரம்கொண்டான்குளம் நிரம்பி தம்பிகுளம் நிரம்பி மற்றொரு குளத்திற்குதான் செல்கிறது. வள்ளியூரான் கால்வாய்ில் இருந்து எங்கள் குளத்திற்கு தண்ணீர் வராதா என்றால், வராது.

கொடுமுடியாறு அணையில் இருந்து வரும் எந்த கால்வாய் வழியாகவும் எங்கள் குளத்திற்கு தண்ணீர் கிடையாதா என்றால், வடமலையான் கால்வாய் வழியாக தண்ணீர் உண்டு அந்த கால்தான் எங்களுக்கு சேர்த்்துள்ளார்கள். நான் சொல்லுவதை போன்று வடமலையான் கால் தவிர வேறு எந்த கால் வழியாகவும் எங்களுக்கு கொடுமுடியாறு அனை தண்ணீர் கிடையாது என்று சொன்னால் சரிதான். நான் எங்களுக்கு என்று சொல்லும் இடம் 3 ம் தபசில் நல்லபெத்தான்குளம் என்று சொன்னால் சரிதான். நல்லபெத்தான்குளத்திற்கு கிழக்கு பக்கம்தான் வடமலையான் கால் செல்கிறது என்றால் அது தவறு நல்லபெத்தான்குளத்திற்கு மேற்கு பக்கம் எங்கள் ஊருக்கு வந்து அதன் பிறகு கிழக்கு நோக்கி செல்கிறது. நல்லபெத்தான்குளத்திற்கு மேற்கு பக்கமே நான் சொல்லும் பகுதியில் வடமலையான்கால் கிடையாது என்றும் அந்த விவரம் வரைபடத்தை பார்த்தாலே துலங்கும் என்று சொன்னால் அது தவறு. நம்பியாறு கிழக்கு நோக்கி ஓடி ஏர்வாடிக்கு சற்று மேற்கே ஆற்றுக்கு குறுக்காக ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த அணையில் இருந்து தெற்கு நோக்கி வரும் கால்தான் வடமலையான் கால் என்று சொன்னால் சரிதான். வடமலையான்கால் ஏர்வாடிக்கு சற்று மேற்கே வடகால் தென்கால் என்று பிரிந்து செல்கிறது என்று சொன்னால் சரிதான். வடகால் தென்காலுக்கு தனித்தனியாக ஷட்டர் இருக்கிறது என்றுசொன்னால் நான் பார்க்கவில்லை. வடகால் வழியாகதான் திருவேங்கடநாதபுரத்தில் உள்ள இரண்டு குளங்களுக்கும் மற்றும் ஆச்சியூர் குளம் , மயிலாப்பூர் குளம் ஆகிய குளங்களுக்க தண்ணீர் செல்கிறது என்று சொன்னால் சரிதான். அதேபோல் வடமலையான் தென்கால் வழியாக நீரை தேக்கி எந்த

ஷட்டரும் இல்லை என்று சொன்னால், இருக்கிறது. பண்டாரகுளத்திற்கு தண்ணீர் செல்வதற்கு கண்டியப்பேரி குளத்திற்கு தென்பக்கம் ஷட்டர் இருக்கிறது. அதற்கு அடுத்தும் கிழவநேரி அருகே ஒரு ஷட்டர் இருக்கிறது.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு வி தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.